Previous Examination Date : 03.11.2020

## CC No.25/2020 Date : 17.05.2022

அ.சா.29 ஐஸ்வர்யா, க/பெ. மணிவண்ணன்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது முதல் விசாரணையில் எனது மாமாவும், ரமேஷ்ம் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டபோது நான் பணத்தை கோர்ட்டில் வேலை செய்யும் ஒரு லேடியிடம் பணம் கொடுத்துவிட்டேன் என்றும், அவர் பெயர் கோவிந்தலெட்சுமி என சொன்னார் என்றும், பின்னர்2 வது எதிரியிடம் ரமேஷ் சென்று கேட்டபோது எனக்கு அதுபற்றி தெரியாது என்று கூறிவிட்டார் எனவும், 1வது எதிரி வீட்டில்தான் கோர்ட்டில் வேலை செய்யும் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி குடியிருப்பதாக சொன்னார் என்றும், 2 வது எதிரி திருவாரூர் கோர்ட்டில் வேலை செய்வதாகவும், ரமேஷ் என்பவருக்கு தெரியும் என்றும், 1வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்துள்ளார் என தெரிந்துக்கொண்டேன் எனவும், 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் அரசு வேலை கிடைக்கும் என நம்பி இருந்தேன் எனவும், 1 வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்து ஏமாந்த விபரம் நீயூஸ் பேப்பர் பார்த்து தெரிந்துக்கொண்டேன் என்றும், நான் முதல் விசாரணை மற்றும் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது கூறியுள்ள விபரங்களை நான் போலிசார் விசாரித்தபோது நான் சொன்னேனா என்றால் போலிசார் பணம் சம்பந்தமாக கேட்டதால் அதனை மட்டும் சொன்னேன். 1வது எதிரியுடன் நான் சேர்ந்துக்கொண்டு அவர் கூறிய ஆசை வார்த்தையின் அடிப்படையில் 2 வது எதிரி அரசு ஊழியர் என்பதால் அவரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் நீதிமன்றத்தில் முதன்முறையாக 2 வது எதிரி பற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Previous Examination Date : 03.11.2020

## CC No.25/2020 Date : 17.05.2022

அ.சா.30 ராதிகா, க/பெ. மைனர்

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது முதல் விசாரணை மற்றும் 1வது எதிரியின் குறுக்குவிசாரணை ஆகியவற்றில் 1வது எதிரி வீட்டிற்கு பக்கத்து வீட்டில் உள்ள 2 வது எதிரியிடம் கேட்கசொன்னதாகவும்,அவரிடம் கேட்டபோது என்னிடம் பணம் கொடுக்கவில்லை, 1வது எதிரியிடம் கொடுத்துள்ளதாகவும், அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் எனவும் 2 வது எதிரி கூறியதாகவும், 1வது எதிரியிடம் வேலை கிடைக்காதது சம்பந்தமாக கேட்டபோது கோர்ட்டில் வேலை செய்யும் 2 வது எதிரியிடம் பணம் கொடுத்ததாக 1வது எதிரி சொன்னார் என்றும், 2 வது எதிரியிடம் நேரில் சென்று கேட்டபோது அது பற்றி எனக்கு தெரியாது என்றும், பணம் என்னிடம் கொடுக்கவில்லை என்றும், 1வது எதிரியிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார் என்றும், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி பணிபுரியும் அலுவலகத்தில் உள்ள அவருடைய சீனியரை தெரியும் 1வ துஎதிரி கூறி வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி பணத்தை கேட்கும் போது 2 வது எதிரியிடம் பணம் கொடுத்த விபரம் தெரியவந்ததாகவும், 1வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்த விபரம் சம்பந்தமாக 1வது எதிரி புகார் கொடுத்த விபரம் தெரியும் என்றும், 2 வது எதிரி நீதிமன்றத்தில் பணிபுரிவதால்தான் அரசு பணி கிடைக்கும் என நம்பினேன் என்றும், 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி முதல் விசாரணை மற்றும் 1வது எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலிசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1வது எதிரி சக்திவேலுடன் சேர்ந்துக்கொண்டு 1வது எதிரி கூறிய ஆசை வார்த்தையின் அடிப்படையில் 2 வது எதிரி அரசு ஊழியர் என்பதால் அவரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் 2 வது எதிரியை தொடர்புபடுத்தி முதன்முறையாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.